**அக்டோபர் 14**

**4 வது வார்த்தை - பிதாவையும் இயேசு கிறிஸ்துவையும் பிரித்த நம் பாவம்.**

**வாசிக்க: மத்தேயு 27:41-46**

நம் ஆண்டவர் சிலுவையில் வேதனையோடு தொங்கி கொண்டிருந்த நேரத்தில் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் மூப்பரும் பரியாசம் பண்ணி: மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத் தான் ரட்சித்துக்கொள்ளத் திராணியில்லை, இவன் இஸ்ரவேலின் ராஜாவானால் இப்பொழுது சிலுவையிலிருந்து இறங்கிவரட்டும், அப்பொழுது இவனை விசுவாசிப்போம். தன்னைத் தேவனுடைய குமாரனென்று சொல்லி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்தானே, அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை இரட்சிக்கட்டும் என்றார்கள். அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.
ஆறாம்மணி நேரமுதல் ஒன்பதாம்மணி நேரம்வரைக்கும் பூமியெங்கும் அந்தகாரம் உண்டாயிற்று. ஒன்பதாம்மணி நேரத்தில் இயேசு: ஏலி! ஏலி! லாமா சபக்தானி, என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார், அதற்கு என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர் என்று அர்த்தமாம்.





வேதத்தில் உள்ள வசனங்களில் அதிகமாக புரட்டப்பட்டதும், தவறாக புரிந்து கொண்டதுமான வசனம் இந்த வசனமேயாகும். நம் ஆண்டவர் பிதாவாகிய தேவனை முதல்முறையாக தேவனே தேவனே என்று அழைத்ததால் இந்த வசனத்தின் ஆழத்தை புரிந்து கொள்ளாத காரணத்தால் அவருடைய தெய்வத்துவத்தையே சிலர் சந்தேகித்தனர். திரியேக தேவன் மனிதனை படைத்தபோது தம் சாயலில் படைத்தார். ஆகவே தான் மனிதனை ஆத்தமாவாக படைத்து, இவ்வுலகத்தோடு தொடர்பு கொள்ள சரீரமும், ஆவிக்குரிய உலகத்து தொடர்பு கொள்ள ஆவியையும் தந்தார். ஆனாலும் ஆவி, ஆத்துமா, சரீரம் மூன்றும் ஒன்றாகவே இருக்கும். மரணம் ஒன்றே பிரிக்கும். அதே போல பிதா, குமாரன், ஆவியானவர் எப்போதும் ஒன்றாகவே இருந்தபோது, நம்முடைய பாவங்களை சிலுவையிலே இயேசு கிறிஸ்துவின் மேல் சுமத்திய போது 3 மணி நேரம் பிதா அவரை விட்டு பிரிந்தார். அதுவரை பிதாவே என்று அழைத்தவர், பிரிவின் வேதனையை தாங்க முடியாமல், முதல்முறையாக தேவனே என்னை ஏன் பிரிந்து கைவிட்டீர் என கதறினார். நம்மை பிதாவோடு சேர்க்கவே, இயேசப்பா பிதாவை விட்டு 3 மணி நேரம் பிரிந்தார். நம்மை சேர்த்து கொள்ள பிதா கிறிஸ்துவை கைவிட்டார். நம் மேலே அவ்வளவு அன்பு வைத்த தேவனை நாம் எவ்வளவு நேசிக்கிறோம்...?

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர் 5:8

## ஜெபம்

மஹா பரிசுத்தமுள்ள எங்கள் அன்பு தகப்பனே, நீங்க என் மேல் வைத்த அன்பை புரிந்து கொள்ளவே முடியல்லைப்பா. உங்க அன்பினால் என் உள்ளத்தை நிரப்பி நடத்துங்க. இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.




Station 12 - Jesus dies on the cross - © 2016 TheCatholicKid.com